ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்பிரம்மணே நம :

" ஸத்யக்ஞான பீடத்தின் " ஆஸ்திகர்களுக்கு அடியேன் செய்யும் மிகப் பணிவான வேண்டுகோள். கீழ் கண்ட விண்ணப்பத்தை ஒவ்வொரு நாளும் திருவாராதன சமயம் பெருமாள் ஸன்னிதியில் ஒரு முறையாவது வாசித்து வர வேண்டுமாய் ப்ராத்திக்கிறேன்


தாஸன்

ஸ்ரீக்ருபா

(க்ரு. பார்த்தசாரதி)

33/16, மேல சித்திரை வீதி ஸ்ரீரங்கம், திருச்சி 620006.

தொ. பேசி -- 0431 – 2434571


---

ஸ்ரீ:

## பிரார்த்தனை

அகாரவாச்யமான எம்பெருமானே!

ஆதி எம் ஜோதியே!

அந்தர்யாமியாக ஸகல சித சித் வஸ்துக்களில் வ்யாபித்திருப்பவனே!

ஸத்யமாயும் நித்யமாயும் க்ஞானஸ்வரூபமாகவும், அதனாற்றலை உன்னடியார்களுக்கு அருளி அதன் பயனாய் அவர்களின் துதியை செவிசாய்த்தருளி கருணையப் பொழியும் அழகிய சிங்கமே!

ஸுகஸ்வரூபமாக நீ இருப்பதால் உன்னடியார்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் ஸுகமளிப்பதையே நோக்கமாக கொண்டு ஸத்ய ஸங்கல்பனாயும் குற்றமொன்றில்லா கோவிந்தனாயும் திகழும் எம்பிரானே!

திருக்கச்சித்திருத்தலத்தின் அருகேயுள்ள கட்டவாக்கம் ( தென்னேரி ) சிம்மபுரம் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டு வந்தடி தொழும் விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் அருள்பாலிக்க திருவுள்ளம் கொண்டாய் போலும் !

தன்னலம் கருதா உன்னடியார்களைக் கருவியாகக்கொண்டு உன் கோயிலை நிர்மாணித்துக் கொண்டு உன்கருணையைக் கொண்டே பலன் ஏதும் கோராத உன் தொண்டர்களின் குழாங்களை பலதாக்கி, நல்லறிவும் ஆற்றலும் நல்கி, நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவ விஶேஷோத்ஸவாதிகளைக் கண்டருளி!

அடியோங்களுக்கு மனிதப்பிறவி அளித்துக்காத்து எங்களுக்கு ஸகலவித உறவாயும் இருந்து வருவது போல் உன் கோவிலில் திருமகளோடு யோகபீடத்தில் வீற்றிருக்கும் உன்னைக் கண்டு களிக்கும் பேரானந்தத்தையும் சடுதியில் தர வேண்டுமென்றும் அடியோங்களது இல்லாமையையும் இயலாமையையும் (ஆகிஞ்சன்யத்தை) முன் வைத்து எக்கணமும் உன் திருமார்பிலும் உனது திருமேனியிலும் வீற்றிருக்கும் திருமகளை முன்னிட்டுக்கொண்டு எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன்தன் குற்றேவலுக்கு எங்களை ஆட்படுத்த வேண்டுமென்று, த்வத்பாத மூலம் சரணம் ப்ரபத்யே என்று அடியோங்கள் செய்யும் விண்ணப்பம்.

ஸர்வாபராதான் க்ஷமஸ்வ !

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹார்ப்பணமஸ்து !